டெரிக் பிரின்ஸ்

தந்தைத்துவம்

ஆசாரியனாக | தீர்க்கதரிசியாக | ராஜாவாக

Derek Prince Ministries - India

"THANDHAITHUVAM"

This book was compiled from the extensive archive of Derek Prince's unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

"FATHERHOOD"(Tamil)

2000/1124/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-75-9
BK-T04-100-TAM

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

அறிமுக உரை

வேதாகம வெளிப்படுத்தல்களில் உள்ள கருப்பொருள்களில் ஒரு மிகப்பெரிய கருப்பொருளாக பிதாவின் ஸ்தானம் (தந்தைத்துவம்) இருக்கிறது. ஆனால் வினோதம் என்னவெனில் இக்கருப்பொருள் கிறிஸ்தவ சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது.

தனிப்பட்ட விதத்தில், பிதாவின் ஸ்தானம் (தந்தைத்துவம்) என்கிற இப்பகுதியை வேதாகமத்தில் படித்தது மாத்திரமல்ல, என்னுடைய சொந்த அனுபவத்திலும் இதை நான் சந்தித்திருக்கிறேன். என் முதல் மனைவி லிடியாவும் நானும் 9 பேர் கொண்ட குடும்பத்தை வளர்த்திருக்கிறோம். இதன் தொடர்ச்சியாக என்னுடைய இரண்டாவது மனைவி ரூத் என் குடும்பத்தில் இன்னும் 3 குழந்தைகளை சேர்த்திருந்தார். ஆகவே மொத்தம் 12 குழந்தைகளுக்கு நான் தகப்பன் என்னும் உறவில் நிற்கிறேன். அவர்களில் பலரும் வளர்ந்து தங்களுடைய சொந்தக் குடும்பங்களை உடையவர்களாயிருக்கிறார்கள்.

தேவனுடைய தந்தைத்துவம் 1

மனிதனுடைய "தகப்பன்" என்னும் ஸ்தானத்தோடு நான் துவங்க விரும்பவில்லை. முதலாவதாக இப்பிரபஞ்சத்தின்பின் மறைந்துள்ள மிகப்பெரிய உண்மையாகிய பிதா என்கிற தேவனுடைய ஸ்தானத்தைப் பற்றி நான் பகிர்ந்துகொள்ளவே விரும்புகிறேன். நம்முடைய தேவனாக பிதா இருக்கிறார்; அவரே எல்லா உண்மைகளின் பின்னால் மறைந்திருக்கிற மிகப்பெரிய உண்மையாக இருக்கிறார். இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவராகவும் தன் ஸ்தானத்தின் அழியாச் சுவட்டை முழு பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் பதித்தவராகவும் பிதா இருக்கிறார்.

எபேசியர் 3:14-15ல், பவுல் தன்னுடைய மிகப்பெரிய அற்புதமான ஜெபங்களில் ஒன்றை ஏறெடுக்கிறார்.

> "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு"

"குடும்பம்" என்கிற வார்த்தை 'பாட்ரியா' என்னும் கிரேக்கப் பதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்தப்பதமோ கிரேக்க பாஷையில் தகப்பன் என்கிற வார்த்தைக்கான பதமாயிருக்கிறபடியினால்,

8: தந்தைத்துவம்

எழுத்தின்படியான நேர்மையான மொழிபெயர்ப்பு 'தந்தைத்துவம்' என்பதாகத் தான் இருக்கும். இங்கே J.B.பிலிப்ஸின் மொழியாக்கத்திலிருந்து அவ்வசனத்தைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்; ஏனெனில் அம்மொழியாக்கம், தகப்பன், குடும்பம் மற்றும் தந்தைத்துவம் என்பவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பின் உண்மையை வெளிக்கொண்டுவருகிறது.

> "இந்த மகத்தான திட்டத்தின் மகத்துவத்தை நான் எண்ணும்போது பிதாவுக்கு முன்பதாக நான் முழங்கால்படியிடுகிறேன். (ஏனெனில் அவரிலிருந்தே பூமிக்குரியதும், பரலோகத்துக்குரியதுமான எல்லாப் பிதாத்துவமும் தன் நாமத்தைப் பெற்றுக்கொள்ளுகிறது)"

என்று பிலிப்ஸ் மொழியாக்கம் கூறுகிறது.

இது குறிப்பிடத்தக்க உண்மையாயிருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் எல்லா பிதாத்துவங்களும் முடிவிலே தேவனுடைய பிதாத்துவத்தை நோக்கியே திரும்பிச் செல்லுகிறது. அந்தப் தந்தைத்துவம் பூமியில் துவங்காமல் பரலோகத்தில் துவங்கினது. தந்தைத்துவம் என்பது தேவனுடைய நித்திய ஸ்தானமாயிருக்கிறது. இது ஒரு குறிப்பட்ட காலத்தோடோ அல்லது மனித சரித்திரத்தோடோ தொடங்காமல் நித்தியத்தில் தொடங்கியது.

நித்தியமாக, தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாக இருக்கிறார்; வேதாகமத்தில் பல பகுதிகளிலும் அவர் அவ்வாறு விவரிக்கப்பட்டுமிருக்கிறார். “ஆதியிலே... அந்த வார்த்தை தேவனோடிருந்தது” என்று யோவான் தன் சுவிசேஷத்தில் கூறுகிறார். அது சிருஷ்டிப்பிற்கு முன்பு இருந்த அனுபவமாக இருந்தது.

தந்தைத்துவம் பூமியில் துவங்காமல் பரலோகத்தில் துவங்கினது. தந்தைத்துவம் என்பது தேவனுடைய நித்திய ஸ்தானமாய் இருக்கிறது.

நித்திய தேவகுமாரனாயிருக்கிற தெய்வீக வார்த்தை பிதாவோடு இருந்தது. அவர் பிதாவின் மடியிலிருந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. சிருஷ்டிப்பு துவங்கும் முன்னரே பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையேயான தனிப்பட்ட நெருங்கிய உறவு இருந்தது. கிறிஸ்தவ வெளிப்படுத்தலின் முழுமையான வித்தியாசமான அம்சமாக இது இருக்கிறது. நான் உலகத்தில்கண்ட மற்ற மத நம்பிக்கையிலிருந்து கிறிஸ்தவத்தை இது மாறுபட்டதாக்குகிறது. இது தனித்தன்மை வாய்ந்த தேவனுடைய தன்மையைப் பற்றிய ஏதோ ஒன்றை வெளிப்படுத்துகிறது. தேவனில் நித்தியமாக ஒரு தந்தைத்துவம் இருக்கிறது. ஒரு உறவு இருக்கிறது.

10: தந்தைத்துவம்

இயேசு பூமிக்கு வந்தபோது, அவரிடத்தில் வருபவர்களைப் பிதாவினிடத்தில் கொண்டுவருவதே அவருடைய முடிவான நோக்கமாயிருந்தது. இது பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குமாரன் மூலமாகப் பிதாவினிடத்தில் வருவது தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது.

“ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு. ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்”

என்று 1 பேதுரு 3:18 கூறுகிறது.

> **இயேசு ஏன் மரித்தார்? நம்மைத் தேவனிடத்தில் கொண்டுவரும்படியாகவே! இயேசு முடிவாயிருக்கவில்லை, வழியாகவே இருந்தார்.**

இதையே அவர் யோவான் 14:6ல் வலியுறுத்திக் கூறினார்.

> **“நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்;**

> **என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.”**

இயேசு வழியாயிருக்கிறார், ஆனால் பிதாவோ போய் சேருமிடமாயிருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் நாம் நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தில் தேவனுடைய நோக்கத்தைத் தவறவிட்டுவருகிறோம் என்று நான் எண்ணுகிறேன். இயேசுவை இரட்சகர் என்றும், பரிந்துபேசுகிறவர் என்றும் மத்தியஸ்தர் என்றும் மிக அதிகமாகப் பேசுகிறோம். இவைகளெல்லாம் அற்புதமானதுதான், ஆனால் இது தேவனுடைய நோக்கம் முழுமையடையாமல் நின்றுவிடுவதாக இருக்கிறது. நாம் குமாரனிடத்தில் மாத்திரம் வருவது தேவனுடைய நோக்கமாயிராமல், குமாரன் மூலமாகப் பிதாவினிடத்தில் வருவது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது.

யோவான் 17ல் இயேசு ஜெபித்த ஜெபத்தில் இயேசுவின் பாஷையைக் குறித்து ஏதோ ஒன்று மிக அழகானதாக இருக்கிறது. இந்த ஜெபம் “பிதாவே“ என் வார்த்தையுடன் தொடங்குகிறது. இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தேவனுடைய நாமத்தை தெரியப்படுத்தினதைப் பற்றி பேசுகிறார்.

> **“நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்.”**
>
> **6ம் வசனம்**

பின்னர், அவர் கூறுகிறார்.

> “பரிசுத்த பிதாவே நீர் எனக்குத் தந்த உம்முடைய நாமத்தில் அவர்களைக் காத்துக்கொள்ளும்.”
>
> (11ம் வசனம்)

ஜெபத்தின் முடிவிலே கூறுகிறார்:

> “நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன் இன்னமும் தெரியப்படுத்துவேன் ”

தன்னுடைய சீஷர்களுக்குத் தெரியப்படுத்தும்படி இயேசு கொண்டுவந்த அந்த நாமம் என்ன? அது பயபக்திக்குரிய நாமமான யெஹோவா அல்ல. யூதர்கள் அந்த நாமத்தை 15 நூற்றாண்டு காலமாக அறிந்திருந்தார்கள். அப்படியானால் புதியதும் பெரியதுமான வெளிப்படுத்தலாக சீஷர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இயேசு விரும்பிய நாமம் என்ன? அந்த நாமம்தான் “பிதா”. இதுதான் தேவனுடைய முடிவான நாமமாயிருக்கிறது. தேவனுடைய நித்தியமான சுபாவத்தில் அவருடைய தன்மையை விவரிப்பதில் பிதா என்னும் வார்த்தையைப் பார்க்கிலும் மிகப்பூரணமாக விவரிக்கிற வேறு வார்த்தை மனித பாஷையில் இல்லை.

ஆகவே புதிய ஏற்பாட்டில் தேவனுடைய முடிவான வெளிப்படுத்தலாக இருப்பது, அவரைப் பிதாவாக வெளிப்படுத்துவதே ஆகும். புதிய ஏற்பாட்டின் முடிவான நோக்கம், இயேசுதாமே ஏன் வந்தார் என்பதின் காரணம் நம்மை தேவனிடத்தில் கொண்டுவருவதாக இருக்கிறது. இந்த தேவனுடைய வெளிப்படுத்தலின்றி நாம் நின்றுவிட்டால், மீட்பினுடைய நோக்கத்தின் கடைசி நிறைவான செயல்பாடில் இருந்தே நாம் நின்றுவிட்டோம்.

இந்த தேவனுடைய வெளிப்படுத்தலின் நிறைவுக்கு நாம் வரும்போதும், தேவன் பிதாவாயிருக்கிற நேரடி உறவுக்குள் வரும்போதும் நம்முடைய கலாச்சாரத்தில் அதிகமானபேரின் உணர்ச்சிகளின் அனுபவத்தில் குறைவுபடுகிற சிலவற்றை அது நமக்கு வழங்குகிறது. இந்த உறவு மற்றும் வெளிப்படுத்தலினால் வருகிற 3 காரியங்கள் - அடையாளம், சுயமதிப்பு மற்றும் பாதுகாப்பாக இருக்கிறது.

நவீன மனிதனுக்குத் தன்னுடைய அடையாளம் ஒரு மெய்யான பிரச்சனையாய் இருக்கிறது.

அடையாளம்

நவீன மனிதனுக்குத் தன்னுடைய அடையாளம் ஒரு மெய்யான பிரச்சனையாய் இருக்கிறது. இந்தத் தேவையின் சுவாரஸ்யமான வர்ணனைதான் “ரூட்ஸ்” என்கிற புத்தகம் மற்றும் தொலைக்காட்சித்தொடரின் வெற்றியாக இருந்தது.

14: தந்தைத்துவம்

அக்கதையின் சாராம்சம், ஒரு மனிதன் தான் தோன்றியதான இடம் அல்லது வேர் எது என்று தேடுவதுதான். எல்லா மனுக்குலமும் அதே தேடலில் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆண்களும், பெண்களும் தாங்கள் எங்கிருந்து வந்தோம் என்றும், தங்களுக்குப் பின்னால் இருப்பது யார் என்றும், எப்படித் துவங்கினது என்றும், தாங்கள் யார் என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். தன்னுடைய தகப்பன் யார் என்று ஒருவர் அறியும்வரை "நான் யார்?" என்ற கேள்விக்கு ஒருவர் உண்மையில் பதிலளிக்கிறதில்லை என்று வேதவாக்கியங்களும் உளவியலும் ஒருமித்து பதிலளிக்கின்றன.

இன்று பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள மனித உறவுகள், ஒரு பெரிய அடையாளப் பிரச்சனையை உருவாக்கியிருக்கிற அளவிற்கு மிகவும் சிதைந்து போயிருக்கிறது. ஆனால் இந்த அடையாளப் பிரச்சனைக்கான கிறிஸ்தவத்தின் பதிலானது, மனிதர்களைக் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நேரடியான தனிப்பட்ட உறவிற்குள் கொண்டுவருவதாய் இருக்கிறது. தேவனைப் பிதாவாக மெய்யாக அறிந்திருக்கிற ஜனங்கள் இனி அடையாளப் பிரச்சனையோடு இருக்கிறதில்லை. அவர்கள் யாரென்று அவர்களுக்குத் தெரியும் – அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். அவர்களுடைய பிதா இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார். அவர்களுடைய பிதா அவர்களை நேசிக்கிறார். அவர்களுடைய பிதா அவர்களை விசாரிக்கிறார்.

சுயமதிப்பு

இது, பிதாவாகிய தேவனுடைய இந்த வெளிப்படுத்தலினால் நமக்கு வழங்கப்படுகிற இரண்டாவது தேவையினிடத்தில் நம்மைக் கொண்டு வருகிறது – இதுதான் சுயமதிப்பின் தேவை. தங்களைத் தாங்களே போதுமான அளவிற்குப் பாராட்ட முடியாத மிகப்பெரிய பிரச்சனையை கொண்டுள்ள எத்தனைப் பேர்களோடு நான் என் ஊழியத்தில் இடைபட்டிருக்கிறேன் என்று என்னால் எண்ணித் தொகையிட முடியாது. அவர்கள் தங்களைப் பற்றிய மிகதரக்குறைவான கண்ணோட்டத்தைக் கொண்டபடியினால், அதிக ஆவிக்குரிய, உணர்ச்சிப் பூர்வமான வேதனைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். 1 யோவான் 3:1 கூறுகிறது,

> **“நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.”**

ஒருமுறை நாம் மெய்யாகவே தேவனுடைய பிள்ளைகள் என்பதையும், தேவன் நம்மை நெருக்கமாகத் தனிப்பட்ட விதத்தில் நேசிக்கிறார் என்பதையும், அவர் நம்மில் விருப்பம் உடையவராயிருக்கிறார் என்பதையும், அவர் ஒருபோதும் நம்மைத் தவிர்க்காமல், நம்மோடு நேரடியான தனிப்பட்ட உறவை விரும்புகிறார் என்பதையும் உணர்ந்து கொள்ளும்போது, அது நமக்கு சுயமதிப்பைக் கொடுக்கிறது. இது மறுபடியும்

16: தந்தைத்துவம்

மறுபடியும் ஜனங்களுடைய வாழ்வில் சம்பவிக்கிறதை நான் கண்டிருக்கிறேன்.

ஒருமுறை நான் ஒரு கூட்டத்திலிருந்தேன். அப்பொழுது ஒரு பெண்மணியின்மேல் மோதக்கூடிய நிலையிலிருந்தேன். நாங்கள் இருவரும் எதிரெதிர் திசையில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தோம். அவள் என்னைப் பார்த்து, “திரு. பிரின்ஸ் அவர்களே, என்னோடு நீர் பேச தேவன் விரும்பினால் நாம் சந்திப்போம் என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன்” என்று என்னிடம் கூறினாள்.

“நல்லது நாம் சந்தித்து விட்டோம். ஆனால் நான் மிகவும் அலுவலாய் இருக்கிறபடியினால், 2 நிமிடம் மட்டுமே என்னால் ஒதுக்க முடியும்” என்று கூறினேன். அவள் தன்னுடைய பிரச்சனை என்னவென்று கூறியபின் நான் இடைமறித்தேன். “எனக்கு இன்னும் ஒரு நிமிடம் மட்டுமே இருக்கிறது... ஆனால் உங்கள் பிரச்சனை என்னவென்று எனக்குத் தெரியும். என்னோடு இந்த ஜெபத்தை சொல்லுவீர்களா?” என்று கேட்டேன். நான் அவளை ஜெபத்தில் வழிநடத்தியபோது அவள் தேவன் அவளுக்குப் பிதாவாக இருக்கிறபடியினாலும், அவள் அவருடைய பிள்ளையாக இருக்கிறபடியினாலும், அவர் அவளை நேசிக்கிறபடியினாலும், விசாரிக்கிறபடியினாலும், அவள் அவருக்கு விசேஷித்தவளாக, இப்பிரபஞ்சத்திலுள்ள மிகச்சிறந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருப்பதினாலும் அவருக்கு ஜெபத்தில் நன்றி செலுத்தினாள். பிறகு நான் அவளுக்கு விடைகொடுத்துவிட்டுச் சென்றேன்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, “உங்களோடிருந்து அந்த ஜெபத்தை ஏறெடுத்தது, வாழ்க்கையைப் பற்றிய என்னுடைய கண்ணோட்டத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. முதல் முறையாக என்னைப் பற்றிய மதிப்புள்ள உணர்வை நான் பெற்றிருக்கிறேன்” என்று அவள் குறிப்பிட்ட கடிதத்தை நான் பெற்றேன்.

பாதுகாப்பு

பிதாவைப் பற்றிய வெளிப்படுத்தல் மூலமாக தேவனுடைய மூன்றாவது மிகப்பெரிய கொடை பாதுகாப்பு ஆகும். பிரபஞ்சத்திற்குப் பின்னால் ஏதோ ஒரு விஞ்ஞான சக்தியோ அல்லது “மிகப்பெரிய மோதுவிசையோ” இல்லாமல், நம்மை நேசிக்கிற பிதா இருக்கிறார்.

என்னுடைய நண்பன் ஒருவன், ஒரு பட்டணத்தின் வெறிச்சோடிய காற்றுவீசுகிற இரவு நேரத்தில், வீதியில் தனிமையின் உணர்வோடு சோகத்துடன் இருந்தான். அவ்வுணர்வை ஜெயிக்க முடியுமாவென்று அறியாதவனாக நின்றிருந்தான். அவன் அத்தெருமுனையில் நின்றிருந்தபோது, “பிதாவே, பிதாவே, பிதாவே” என்று மறுபடியும் மறுபடியும் கூப்பிட ஆரம்பித்தான். அவ்விதம் செய்யவே அவனுக்குள் பாதுகாப்புணர்வு கடந்துவந்தது. அவனைச் சுற்றிலும் காரியங்கள் குளிராக இருண்டு இருந்தபோதிலும் தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு உருவாக்கின பிரபஞ்சத்தில் அவன் தேவனுடைய பிள்ளை என்பதை அறிந்துகொண்டான்.

தகப்பனாக மனிதன் 2

தேவனுடைய நித்திய தன்மையும் சுபாவமும் பிதாவைப் பற்றியதாக இருக்கிறபடியினால், ஒவ்வொரு தகப்பனும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தேவனுடைய பிரதிநிதியாகச் செயல்படுகிறான். ஒரு தகப்பனை நல்ல தகப்பன் என்று நாம் சொல்லக்கூடும். ஒருவிதத்தில் இது ஒரு மனிதன் அடைந்து கொள்ளக்கூடிய தெய்வத்தைப் போன்ற நிலையாக இருக்கிறது. ஒரு மனிதனுடைய உன்னத சாதனையாக இது இருக்கிறது.

ஒருமுறை ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்திற்கும், ஒரு கருத்தரங்கிலிருந்து மற்றொரு கருத்தரங்கிற்கும் தொடர்ச்சியாகப் பிரயாணஞ்செய்து கொண்டும், பெரிய கூட்டத்திற்குப் பிரசங்கித்து ஜனங்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்ற ஒரு சந்தர்ப்பத்தை நினைவு கூறுகிறேன். ஆனால் "ஒரு சிறு கைப்பெட்டியுடன் வீட்டிலிருந்து தொலைவில் இருக்கிற மனுஷன் மிகுந்த திறமைசாலி" என்று ஒரு மனிதன் கூறியதைக் கேட்டேன். அது என் இருதயத்தில் அம்பைப்போலப் பாய்ந்தது. "அது உண்மையில் என்னைத்தான் வர்ணிக்கிறது. கைப்பெட்டியுடன் வீட்டைவிட்டு தூர இருக்கிற மனிதன் நான்தான். எல்லாரும் என்னை திறமைசாலி அல்லது தேறினவன் என்று எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் என் வீட்டில் என்ன நடக்கிறது?"

மற்ற எந்த ஸ்தானத்தில் நான் வெற்றி பெறுவதற்கு முன்பதாக முதன் முதலாக, பிரதானமாக ஒரு புருஷனாக, தகப்பனாக நான் வெற்றி பெற வேண்டும் என்று தேவன் முற்றிலும் புதுவிதத்தில் என்னிடம் சவால் விட்டார். மற்ற ஸ்தானங்களில் வெற்றிபெற்றுவிட்டு, ஒரு தகப்பனாகத் தோற்றுப்போவது தேவனுடைய பார்வையில் தோற்றுப்போவதுதான்.

நம்முடைய கலாச்சாரத்தில் இன்றைக்கு அநேகரைப் பற்றிய விஷயத்தில் இது உண்மை என்றே நான் நம்புகிறேன். அநேக நிலைகளில் அவர்கள் வெற்றியடைய முடியும். கோல்ப் விளையாட்டில், வங்கியின் தலைவராக, புத்தக ஆசிரியராக, நடிகராக, ஏன் கிறிஸ்தவ ஊழியராகக்கூட வெற்றிபெறுகிறார்கள் . ஆனால் வீட்டிலோ தோற்றுப்போய்விடுகிறார்கள். நான் உங்களுக்கு கூறுகிற ஆலோசனை என்னவெனில், வீட்டில் தகப்பனுடைய ஸ்தானத்தில் நீங்கள் தோற்றுப்போவது என்பது உங்கள் தோல்விதான், மற்ற துறைகளின் வெற்றி அந்தத் தோல்விக்கு ஈடாக முடியாது.

1 கொரிந்தியர் 11:3ல் பவுல் தேவனுக்கும் வீட்டிற்கும் இடையேயுள்ள உறவைப் பற்றிப் பேசுகிறார்.

> “ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன்

தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.”

ஆகவே கிறிஸ்து புருஷனின் தலையாகவும், புருஷனோ குடும்பத்துக்கும் மனைவிக்கும் தலையாகவும் இருக்கிறான். ஆகவே ஒருவிதத்தில் கூறினால் புருஷனும், தகப்பனுமாயிருக்கிற மனுஷன் தன் குடும்பத்திற்கு கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கிறான். கிறிஸ்து அவனிடத்தில் கொண்டிருக்கிற அதே உறவை தன் குடும்பத்துடன் கொண்டிருக்கிறான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்துள்ள 3 முக்கியமான கிறிஸ்துவின் ஊழியங்கள் இருக்கின்றன. அவையாவன: ஆசாரிய ஊழியம், தீர்க்கதரிசன ஊழியம் மற்றும் ராஜாவின் ஊழியம். ஒவ்வொரு ஊழியத்தோடும் சம்மந்தப்பட்டதைச் சுருக்கமாக விவரிக்கிறேன்.

ஒரு ஆசாரியனாக ஒரு தகப்பன் தன் குடும்பத்தை தேவனிடம் சுமந்து செல்லுகின்றான்.

தீர்க்கதரிசியாக தேவனைத் தன் குடும்பத்திற்கு வெளிப்படுத்துகிறான்.

ராஜாவாக தேவனின் சார்பாகத் தன் குடும்பத்தை ஆளுகிறான்.

ஆசாரியனாக ஒரு தகப்பன் 3

தகப்பன் தன் குடும்பத்தின் ஆசாரியனாக இருந்து ஜெபத்திலும், பரிந்து பேசும் மன்றாட்டிலும் தன் குடும்பத்தை தேவனிடம் சுமந்து செல்லுகிறான். தீர்க்கதரிசியாக, ராஜாவாகத் தன் குடும்பத்தில் ஊழியம் செய்து ஜெயம்பெறுவது அவன் ஆசாரியனாக, பரிந்துபேசி மன்றாடுவதில் வெற்றிபெறுவதோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. அவன் பரிந்துபேசுகிறவனாக ஜெயம் பெற்றால், தீர்க்கதரிசியாகவும், ராஜாவாகவும்கூட அவன் வெற்றிபெறக்கூடும். ஆனால் தன் குடும்பத்திற்காகப் பரிந்துபேசும் ஊழிய அனுபவத்தை அவன் விளங்கிக்கொள்ளாவிட்டால், தன் குடும்பத்தில் தீர்க்கதரிசியாகவோ அல்லது ராஜாவாகவோ இருப்பது மிகக் கடினமாகிவிடும்.

பரிந்துபேசும் ஊழியத்தைப் பயிற்சிசெய்த பிதாக்களைக் குறித்து வேதாகமத்தில் சில அழகான உதாரணங்கள் இருக்கின்றன. யோபு புஸ்தகத்தின் ஆரம்பத்தில் யோபு உத்தமனும் சன்மார்க்கனுமாகத் தேவனுக்கு முன்பாகக் காணப்பட்டான். அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் இருந்தார்கள்; வாரத்தில் ஒரு நாள் அவன் குடும்பம் அவன் குமாரரில் ஒருவர் வீட்டில் விருந்திற்காகவும் ஐக்கியத்திற்காகவும் கூடினார்கள். ஒவ்வொரு வாரத்தின் முடிவிலும் யோபு அதிகாலமே எழுந்து தன் குமாரர்களுக்குப் பதிலாகப் பலிகளைச் செலுத்தி அவர்கள் தேவனுக்கு

விரோதமாகப் பாவங்களைச் செய்திருக்கக்கூடும் என்று தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுவான். ஆகவே அவர்களுக்குப் பதிலாக அவன் பலிகளைச் செலுத்துவான்.

பழைய ஏற்பாட்டின் சொல்லாட்சியில், யோபு பலிகளை செலுத்தியது, இயேசு கிறிஸ்துவிலுள்ள புதிய உடன்படிக்கையில் நம்முடைய பிள்ளைகளுக்காக நாம் செய்கிற பரிந்துபேசும் ஜெப ஊழியத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளைகளுக்காக பரிந்து பேசுகிறவர் என்று அழைக்கப்படுகிறார்.

பின்பு இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்தில் அடிமைகளாக அந்தகாரத்திலும் ஒடுக்கத்தின்கீழும் இருந்த சரித்திரத்திற்கு வருவோம். பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலியின்மூலமாக அவர்களுடைய விடுதலைக்கான வழியை தேவன் உண்டாக்கினார். இஸ்ரவேலருக்கும், எகிப்தியருக்கும் முடிவான வேறுபிரித்தலின் அம்சமாக பஸ்கா இருந்தது, ஒவ்வொரு இஸ்ரவேல் குடும்பத்தின் விடுதலைக்கும் அது வழி உண்டாக்கியது.

சங்காரத்தூதன் ஒவ்வொரு எகிப்தியரின் வீட்டிற்கும் வந்து தலைச்சன்களையெல்லாம் கொன்றான். ஆனால் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் நிமித்தமாகச் சங்காரத்தூதன் இஸ்ரவேலரின் வீட்டிற்குள் நுழையவோ, அழிக்கவோ அனுமதிக்கப்படவில்லை. அந்த இரத்தம் எப்படி பூசப்பட்டது? யார் அதைப் பூசியது?

> **“நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக் கடவர்கள்.”**

தன் குடும்பத்தின் சார்பாக தேவனால் நியமிக்கப்பட்ட ஆசாரிய ஊழியம் தகப்பனுக்கு இருந்தது.

ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுப்பதற்கு யார் பொறுப்பாயிருந்தார்கள்? ஒவ்வொரு குடும்பத்தின் தகப்பன், ஆட்டுக்குட்டியைக் கொல்வதற்கு யார் பொறுப்பு? தகப்பன், நிலைக்கால்களில் ஈசோப்பினால் இரத்தந்தெளிப்பதற்கு யார் பொறுப்பாயிருந்தது? தகப்பன். வேறுவிதத்தில் கூறினால், தன் குடும்பத்தின் சார்பாக தேவனால் நியமிக்கப்பட்ட ஆசாரிய ஊழியம் தகப்பனுக்கு இருந்தது. அவனுடைய வீட்டில் இரட்சிப்பிற்கான தேவனுடைய வழி செயல்படுத்தப்படுவதைக் காண்பது அவனுடைய உத்திரவாதமாயிருந்தது. வேதாகமத்தின் வியாக்கியானத்தை நான் விளங்கிக்கொண்டவரை ஒரு தகப்பனுடைய வேலையை அவனுக்காக வேறு யாரும் செய்யமுடியாது. அவன் ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றி இரத்தந்தெளித்தால், அவனுடைய

தன் குடும்பத்திற்குத் தெய்வீகப் பாதுகாப்பளிப்பது ஒரு தகப்பனின் உத்திரவாதமாக இருக்கிறது.

குடும்பம் பாதுகாப்பாயிருக்கும். அவன் அதில் தோற்றுப்போய்விட்டால் அவன் ஸ்தானத்தில் நின்று அவன் குடும்பத்திற்குப் பாதுகாப்பளிக்கிற வேறொருவர் இல்லை.

தேவன் அந்த வெளிப்படுத்தலை நம்மிடம் வரச்செய்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன், ஏனெனில் இது இன்றைக்கும் செயலாக்கம் உடையதாகவே இருக்கிறது. ஆவிக்குரிய மண்டலத்தில், ஒரு தகப்பன் செய்யவேண்டியதும், மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க முடியாததுமான ஒன்றாக இருக்கிறது. தேவன் அங்கீகரிக்கிற ஆசாரிய ஊழியத்தோடு தன் குடும்பத்திற்காக அவன் ஊழியஞ்செய்ய முடியும், ஆனால் ஒரு தகப்பனிடத்தில் அல்லாமல் வேறொருவரும் அவ்வூழியத்தை அங்கீகரிக்கக் கடமைப்பட்டவரல்ல. தன் குடும்பத்திற்குத் தெய்வீகப் பாதுகாப்பளிப்பது ஒரு தகப்பனின் உத்திரவாதமாக இருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் ஊழியத்தைப் பற்றி ஒரு குறிப்பிடத்தக்க உண்மையை நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தின் மூலமாக நான் கற்றுக்கொண்டிருக்கிற ஒரு உண்மையாய் அது இருக்கிறது. ஒரு பிள்ளைக்கு ஜெபிக்கும்படி என்னைக் கேட்டுக்கொள்ளுகிற

ஜனங்களைப் பார்த்து, “இந்தக் குழந்தையின் பெற்றோரா நீங்கள்? நீங்கள் தாய் தகப்பனா?” என்று கேள்விக்கேட்கக் கற்றுக்கொண்டிருக்கிறேன். சில வேலைகளில் அவர்கள் பதில் “இல்லை” என்று வரும். “நாங்கள் பக்கத்துவீட்டுக்காரர்கள். பெற்றோர் வர விரரும்பவில்லை” என்று பதில்வரும்.அப்படிப்பட்ட குழந்தைக்கு ஜெபிப்பதற்கான எந்த வேதவசன ஆதாரமும் இல்லை என்பதை தேவன் நிச்சயமாக எனக்குக் காண்பித்திருக்கிறார். இயேசுவின் ஊழியத்தைப்பார்த்தால், ஒரு பிள்ளையினுடைய பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரின் விசுவாசத்தின் அடிப்படையில்தான் இயேசு ஊழியம்செய்தார் என்பதை நாம் கண்டுகொள்ளலாம். எப்பொழுதும் ஒரு பிள்ளைக்காகப் பெற்றோர் தங்களுடைய விசுவாசத்தை செயல்படுத்த வேண்டுமென அவர் விரும்பினார்.

மாற்கு 9ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊமையான ஆவிபிடித்த பையன் விஷயத்தில் இது மிகவும் தெளிவாகிறது. இயேசு மறுரூப மலையிலிருந்து இறங்கிவந்தபொழுது அந்தப் பையனிடத்திலிருந்து அந்த ஆவியை சீஷர்கள் துரத்தக்கூடாதிருந்த காட்சியைக் கண்டார். இயேசு அந்த பையனின் தகப்பனிடத்தில் பேசி எவ்வளவு காலம் அந்தப் பையன் வேதனைப்படுகிறான் என்று கேட்டார். அவன் “சிறுபிள்ளையாய் இருக்கும் பொழுதில் இருந்தே” என்று தகப்பன் பதிலளித்தான். அவன் தொடர்ந்து கூறினது:

> **“இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும், தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.”**
>
> **(மாற்கு 9:22–23)**

தன் பிள்ளைக்காக விசுவாசிக்க வேண்டிய உத்திரவாதத்திற்கு தகப்பனை இயேசு கொண்டு வந்ததை ஒருநாள் உணர்ந்து கொண்டேன். அந்தப் பையன் அவனுடைய நிலைமையினிமித்தம் விசுவாசத்தை செயல்படுத்தக் கூடாதிருந்தபடியினால், இயேசுவும் அவனை விசுவாசிக்கும்படிச் சொல்லவில்லை. மகனுக்காகத் தகப்பன் தன் விசுவாசத்தைச் செயல்படுத்தும்படிக் கூறினார். பரிந்துபேசும் ஜெபத்தின்மூலம் தங்கள் பிள்ளைகளுக்காகப் பெற்றோர் விசுவாசத்தைச் செயல்படுத்தி இயேசுகிறிஸ்து மூலம் அவர்களைத் தேவனிடத்தில் கொண்டுவர வேண்டும். நீங்கள் வேத வசனத்தைத் தேடலாம், பிள்ளைகளுக்காகப் பெற்றோர் விசுவாசத்தைச் செயல்படுத்தாத பட்சத்தில், தேவனுடைய நியமங்களுக்கு மாறாக அவர் கிரியை செய்யமாட்டார்.

கடைசியாக, அப்போஸ்தலர் 16:31யை பார்க்கும்போது பிலிப்பிய சிறைச்சாலைத் தலைவனுடைய கதையைப் பார்க்கிறோம். பவுலும், சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டபோது, தேவன் ஒரு பூமியதிர்ச்சியின் மூலம் இடைபட்டு சிறைச்சாலைக் கதவுகள் திறவுண்டது, பவுல் மற்றும் சீலாவின் கட்டுகள் அறுந்தது. சிறைச்சாலைத் தலைவன் உள்ளே ஓடிவந்து, "நான் இரட்சிக்கப்படும்படி என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

> **"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்"**

என்று 31ம் வசனம் கூறுகிறது.

சிறைச்சாலைத் தலைவன், தன் வீட்டின் தகப்பனாக, தன் வீட்டாரின் இரட்சிப்பிற்காக தன் விசுவாசத்தைச் செயல்படுத்தக்கூடிய தேவனால் கொடுக்கப்பட்ட பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டான். பல சந்தார்ப்பங்களில் "உன் வீட்டாரும்" என்கிற கடைசி வார்த்தைகளை விட்டுவிடக்கூடிய பரிதாபமான நிலையில் நாம் இருக்கிறோம்.

தீர்க்கதரிசியாக ஒரு தகப்பன் 4

ஒரு தகப்பன் தன் குடும்பத்திற்காக எடுக்கும் இரண்டாவது பெரிய உத்திரவாதமாக இருப்பது தீர்க்கதரிசியின் ஸ்தானம்; அதாவது, தன் குடும்பத்திற்கு தேவனுடைய பிரதிநிதியாகச் செயல்படுவதாகும்.

நாம் காணவேண்டிய முதல் காரியம் என்னவெனில் ஒரு தகப்பன் தன் குடும்பத்திற்கு தேவனுடைய பிரதிநிதியாகச் செயல்படுகிறான் என்பதேயாகும். அதைச் செய்ய அவன் விரும்பாமல் இருக்கலாம், அதை நன்றாகச் செய்யலாம் அல்லது மோசமாகக் கூடச் செய்யலாம். ஆனால் அவன் அதைச் செய்கிறான் என்பதுதான் உண்மை. மனநலமருத்துவர்கள், சமூகவியல் வல்லுனர்கள், ஊழியத்தில் இருப்பவர்களாகிய இவர்களெல்லாம் அங்கீகரிக்கக்கூய கருத்து என்னவெனில் ஒரு பிள்ளை தேவனைப்பற்றிய தனது முதல் எண்ணத்தைத் தன் தகப்பனிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறது என்பதுதான். இது தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்று நான் எண்ணுகிறேன். தேவன் எந்த மனுஷனுக்கும் கொடுத்திருக்கிற தெய்வீக உத்திரவாதம் என்னவெனில் அவன் மற்றவர்களுக்குத் தேவனைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதேயாகும்.

ஒரு நபர் தேவனிடத்தில் வெளிப்படுத்துகிற ஆரம்ப உணர்விற்கு, அவர் எப்படிப்பட்ட தகப்பனைக் கொண்டிருக்கிறார் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது.

32: தந்தைத்துவம்

அன்பான, மென்மையான இருதயம் கொண்டு, வெளியே அழைத்துச் செல்லுகிற, எளிதில் இடைபடக்கூடிய தகப்பனை ஒரு நபர் உடையவராயிருந்தால், அவ்விதத் தன்மைகளின் எதிர்பார்ப்பில் தேவனிடம் வருவார். அன்பில்லாத, கடுமையான, அளவிற்கதிகமான அடக்குமுறையையுடைய நபரை ஒருவர் தகப்பனாகப் பெற்றிருந்தால், அவர் தேவனையும் அவ்விதமாகவே எண்ணுவார். மனுக்குலம் வாழமுடியாத அளவிற்கு கடுமையான கட்டளைகளை வெளிப்படுத்துகிறவராக, யதார்த்த நிலையற்றவராக, சட்டதிட்டங்களை உடையவராக, கொடூரமானவராகவே அவர்கள் தேவனைப் பார்ப்பார்கள். சில சமயங்களில், ஒரு குழந்தைக்கு உண்மையில் கொடூரமான ஒரு தந்தை இருந்துவிடுகிறார். பெரும்பாலும், அத்தகைய குழந்தை அறியாமலேயே இயற்கையான மனித தந்தையிடமிருந்து தேவனுக்கு அந்தப் பண்புகளை மாற்றுகிறது. எவ்விதக் காரணமுமின்றி, தகப்பனுடைய குணாதிசயத்தின் விளைவாக தேவனைக்குறித்து எதிர்மறையான செயல்பாட்டுடன் இருப்பார்கள்.

ஒரு தகப்பன் தீமைக்கான ஒரு தீர்க்கதரிசியாக அல்லாமல், நன்மைக்கான தீர்க்கதரிசியாக தேவனைத் தன் குடும்பத்திற்கு எப்படி வெளிப்படுத்தமுடியும்?

> **“பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும்,**

> **போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக”**

என்று பவுல் தகப்பன்மார்களுக்கு சொல்லுவதுபோல எபேசியர் 6:4ல் எழுதுகிறார். மறுபடியும் கொலோசெயர் 3:21ல்,

> **“பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்”**

என்றும் எழுதுகிறார்.

இங்கே புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாட்டைப்போலவே, பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய போதனையையும், அறிவுரையையும் வழங்குவதற்கான உத்திரவாதத்தை தகப்பனுடைய தோளிலேதான் சுமத்துகிறது. சாதாரணமாக, தாய்மார்கள்தான் தங்கள் பிள்ளைகள்மேல் நெருக்கமாகத் தம்முடைய ஆதிக்கத்தைச் செலுத்துவார்கள். ஆனால் முதன்மையாக, ஆவிக்குரிய அறிவுரைகளை பிள்ளைகளுக்கு வழங்குகிற உத்திரவாதத்தை தகப்பன்தான் உடையவராய் இருக்கிறார். தகப்பன் அதைச் செய்யாவிட்டால், அந்த

முதன்மையாக ஆவிக்குரிய அறிவுரைகளை பிள்ளைகளுக்கு வழங்குகிற உத்திரவாதத்தை தகப்பன்தான் உடையவராய் இருக்கிறார்.

உத்திரவாதத்தை வேறொருவரும் எடுத்துக் கொள்ள முடியாது.

பெரும்பான்மையான தந்தைகள், தங்கள் பிள்ளைகளுக்கு ஏதேனும் போதிக்கும் பொறுப்பு தங்களுக்கு இருப்பதாக அவர்கள் அறிந்திருந்தால்,

தகப்பன்.... இரண்டு அபாயங்களுக்கு எதிராகத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

ஞாயிறு பள்ளிக்கோ, சபைக்கோ, போதகருக்கோ, அல்லது வாலிபர் குழு தலைவருக்கோ அதை மாற்றுவதில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். பெரும்பாலும், அத்தகைய பெற்றோர், தனது குழந்தை ஏதேனும் ஒரு சபையிலோ அல்லது வாலிபர் குழுவிலோ இருந்து, வழிதவறிச் சென்றால் சபையை அல்லது வாலிபர் குழுவை குறை சொல்லுவார்கள். தந்தை தனது குழந்தைகளை தேவனின் ஒழுக்கத்திலும், போதனையிலும் வளர்ப்பதற்கான முதன்மையான பொறுப்பிலிருந்து தன்னை விலக்க முடியாது. இது அவரது புனிதமான பொறுப்புகளில் ஒன்றாகும், இது மாற்ற முடியாத ஒன்றாகும்.

இதை செய்வதின்மூலம் இரண்டு அபாயங்களுக்கெதிராகத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். முதல் அபாயம் பிள்ளையினுடைய முரட்டாட்டமான சுபாவம்.

உறுதியான ஒழுங்கு நடவடிக்கைகள் மூலமாகத் தகப்பன் பிள்ளைகள் பொறுப்பற்று, அலைந்து திரிகிறவர்களாக மாற அனுமதிக்காமல், எதிர்த்துப் பேச அனுமதிக்காமல், அவர்களுக்குச் சொல்லப்பட்டதை சரியாக, அமைதலோடு, கீழ்படிதலோடு செய்யும்படிப் பணித்து பாதுகாப்பது. இவ்விதமாய் வளர்க்கப்பட்ட பிள்ளைகளுக்கு அறிவுரை கொடுப்பது மிகவும் எளிதான ஒன்றாயிருக்கும்.

என்றபோதிலும், இதற்கு மாறான ஆபத்தாகிய மனமுடைந்துபோகக்கூடிய ஆபத்திலிருந்து ஒரு தகப்பன் பாதுகாக்க வேண்டும். ஒரு தகப்பன் தேவைக்கதிகமாக கடுமையானவராக, விமர்சிக்கிறவராக, கட்டளையிடுபவராக இருந்தால், அந்தப் பிள்ளை மனமுடைந்துபோய், “இது மிக மோசம், என் தகப்பனைப் பிரியப்படுத்த என்னால் எதுவும் செய்ய முடியாது, ஆகவே அதற்கு முயற்சி செய்யாதிருப்பது நல்லது” என்ற மனநிலைக்கு வந்துவிடும். ஆகவேதான் அப்போஸ்தலனாகிய பவுலும், “உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடிக்கு, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்” என்று எச்சரிக்கிறார்.

உணர்ச்சிப்பூர்வமான பிரச்சனைகளுக்காகப் பலர் என்னிடத்தில் உதவிதேடி வந்திருக்கிறார்கள்; நான் அவர்களோடு இடைபட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் சிறுவயதில் அனுபவித்திருக்கிற எதிர்மறையான காரியங்கள், விமர்சனங்கள், அவமானம், மற்றவர்களுக்கு முன்பாக மரியாதையின்றி

தரக்குறைவாக கடிந்துகொள்ளப்பட்ட சம்பவங்களால் அவர்களில் சுயமதிப்பு இல்லாமல், தோல்வியின் உணர்வோடு, நிராசையோடு இருப்பதை பலமுறை நான் கண்டுபிடித்திருக்கிறேன். இவ்விதமான காரியங்கள் அந்தப்பிள்ளையின் ஆத்துமாவில் காயத்தை, வடுவை ஏற்படுத்தி 20, 30 வருடங்களாக ஆறாமல் இருக்கிறது. ஒருபக்கம் ஒழுங்கைப் பராமரிப்பதில் தகப்பன்மார் ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், மறுபக்கம் பிள்ளைகள் மனமுடைந்துபோகாதபடி பார்த்துக்கொள்வதிலும் ஜாக்கிரதை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

குடும்பத்தில் தன்னுடைய உத்திரவாதத்தைச் சந்திக்கும்படியாக, பிள்ளைகளோடு வழக்கமாகப் பேசுகிற பழக்கத்தை உடையவராக ஒரு தகப்பன் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் தன் உத்திரவாதத்தை நிறைவேற்ற முடியாது. ஒரு தகப்பனுக்கும் பிள்ளைக்குமிடையே உரையாடல் மதரீதியில் அல்லாத சூழலில் இருக்குமானால் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். தகப்பன் தங்களுக்கு அளிக்கிற அறிவுரைகளைப் பிள்ளைகள் கடினமான, நியதிகளுக்குட்பட்ட மதரீதியானதாகப் பார்த்தால், கடைசியில் அவர்கள் பக்தியையும், அறிவுரையையும் வெறுத்துவிடக்கூடிய இடத்திற்கு வந்துவிடுவார்கள். பலருடையப் பிரச்சனைகள் அவ்விதச் சூழலோடு சம்மந்தப்பட்டதை நான் எண்ணிப்பார்க்க முடியும்.

பிள்ளைகளோடு பேசவேண்டும் என்பதற்காக நாம் பேசாமல், அவர்கள் நம்மோடு பேசும்படி நாம் பேசவேண்டியது மிகவும் அவசியம். முரட்டாட்டமானப்

பிள்ளைகளோடு இடைபடும்போது, தங்கள் தகப்பன் தங்கள் கருத்துகளுக்குச் செவிகொடுப்பதில்லை என்கிற ஒரு புகாரை அவர்களிடமிருந்து நாம் கேட்கமுடியும். ஆகவே அவர்கள் சொல்லுகிறதைக் கவனித்துக்கேட்கும் பழக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய பிள்ளைகள் உங்களோடு பேசவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும், அவர்கள் பிரச்சனைகளை உங்களிடத்தில் கொண்டுவரவும் அனுமதித்து, அதை அதிக மதரீதியான சூழலில் செய்யாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இஸ்ரவேலர்கள் தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும் என மோசே கொடுத்த நியாயப்பிரமாணத்தில் இந்த நியதி குறிப்பிடப் பட்டுள்ளது. உபாகமம் 11:18-21

> “ஆகையால் கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு, நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல்

> **அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக.”**

வேதாகமத்தில் “பரலோகம் பூமியின்மேல் இருக்கிறதுபோல்” என்ற வார்த்தையை நான் கண்டுபிடித்தபோது நான் பிரமித்துப்போனேன். மேலும், தம் மக்களின் குடும்பங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதற்கான விளக்கமாக இது இருந்தது. இந்த நவீன உலகத்தில் எத்தனை குடும்பங்கள் பூமியின்மேலுள்ள பரலோகமாக இருக்கிறது? அது மிகமிகக் குறைவு.

மோசே அவர்கள் செய்யவேண்டுமென்று கூறியதில் பிதாக்கள் தோற்றுவிட்டார்கள். மோசே, உண்மையில், தேவனுடைய வார்த்தையை, உங்கள் விசுவாசத்தின் சத்தியங்களை, உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். நீங்கள் உட்காரும் போதும், எழுந்திருக்கும் போதும், வழியில் நடக்கும் போதும், அவைகளைப் பற்றி பேசுங்கள் என்றார். வேறு தைகளில்

வேதவசனம் உங்கள் குடும்ப வாழ்க்கையின் மையக்கருத்தாக இருக்க வேண்டும்.

கூறவேண்டுமானால், வேதவசனம் உங்கள் குடும்ப வாழ்க்கையின் மையக்கருத்தாக இருக்க வேண்டும். தேவாலயம், ஞாயிறு பள்ளி அல்லது வாலிபார் குழுவிற்கு வேத போதனையை ஒதுக்கிவிட வேண்டாம். நம்முடைய அனுதின வாழ்வில் தேவனுடைய வார்த்தைக்கு இயற்கையான இடம் இருக்கவேண்டும். அது எப்படிக் கிரியை செய்கிறது என்பதை நிஜவாழ்வில் பிள்ளைகள் காணச்செய்ய வேண்டும்.

ஒரு காலத்தில் வீட்டன் கல்லூரியின் ஒரு தலைவராக இருந்த மறைந்த முனைவர். வி. ரேமண்ட் எட்மன் அவர்களின் சாட்சியை நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன், அவர், "நான் என் பிள்ளைகளை வளர்த்த விதத்தை நான் நினைத்துப் பார்க்கும்போது, நான் மீண்டும் அதை செய்ய வேண்டியிருந்தால், நான் அவர்களுடன் மதச் சார்பற்ற எளிமையான செயல்களில் அவர்களுடன் அதிக நேரம் செலவிடுவேன்," என்றார். அதற்கு நான் "ஆமென்" என்று சொல்ல வேண்டும். நான் என் பிள்ளைகளிடம் செலவழித்த சில நேரங்களை மீண்டும் என்னால் வாழ முடிந்தால், இதைத்தான் நான் செய்வேன். முனைவர். எட்மன் வளர்ந்த குழந்தைகள் அதிகம் நினைவில் வைத்திருப்பது, ஒன்றாக இருந்த இயல்பான நேரங்களைத்தான் என்று கண்டறிந்தார்.

40: தந்தைத்துவம்

ஒரு குழந்தையோடுள்ள மெய்யான தொடர்பு 5 நிமிடங்களில் நடைபெற்று விடுவதில்லை. பெரும்பாலும் மிகமுக்கியமான காரியங்கள் மிகச் சாதாரண முறையில், அறைகுறையாக ஒரு பிள்ளையோடு சொல்லப்படுகிறது. உதாரணமாக, ஒரு மீன்பிடி பயணத்தில், தோட்டக்கலையில், புல்வெளி வெட்டுவதில், சுத்தம் செய்தல் அல்லது வாகனம் ஏன் ஓடவில்லை என்பதைக் கண்டறிதல் இதுபோன்ற சூழ்நிலைகளின்போது சொல்வதே ஆகும். ஆனால் அந்தச் சூழ்நிலைகள்தான் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே ஒரு மெய்யான தொடர்பை ஏற்படுத்த வேண்டியவைகள். அச்சூழ்நிலைகளில் ஒரு தகப்பன் தன் பிள்ளையிடம் தேவனுடைய வார்த்தையின் ஆழமான நியதிகளை எடுத்துக் கூறவேண்டும். ஒரு குடும்பத்தில் நாம் நேரத்தைச் செலவழிப்பதைப் பொறுத்துதான் இது நடைபெறும்.

ராஜாவாக ஒரு தகப்பன் 5

ராஜாவுடைய வேலை ஆட்சிசெய்வதுதான், இது ஒரு தகப்பனாக வீட்டில் செய்யவேண்டிய மூன்றாவது ஊழியமாயிருக்கிறது.

நவீன அமெரிக்காவில், "ராஜா" என்கிற வார்த்தை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், ஏற்புடையது அல்ல. ராஜா என்கிற வார்த்தையை நாம் விரும்பாவிட்டால், ஆளுநர் என்கிற வார்த்தையை அதற்குப் பதிலாகப் பயன்படுத்தலாம். எப்படியானாலும், தேவனின் சார்பாக ஒரு தகப்பன் தன் குடும்பத்தை ஆளுகை செய்வதுதான் அவனுடைய செயல்பாடாக இருக்கிறது.

நாம் 1 தீமோத்தேயுவிற்குக் கடந்துவந்தால் பவுல் கண்காணியின் ஸ்தானத்தை விரும்புகிற மனுஷனடைய தகுதிகளை விவரிக்கிறதைக் காணலாம். மூப்பர், கண்காணி அல்லது பிஷப் (பாதிரியார்) போன்ற பல பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டாலும் தேவனுடைய ஜனங்களை ஆளுகை செய்கிற ஒரு மனிதனைக் குறித்து அங்கே குறிப்பிட்டிருக்கிறது. எல்லாத் தகுதிகளைப் பார்க்கிலும் முக்கியமானது அந்த மனிதனுடைய வீட்டின் நிலவரம்தான். அந்த மனிதன் வீட்டில் எப்படி செயல்படுகறான்? அதைத்தான் பவுல் 1 தீமோத்தேயு 3:4–5ல் குறிப்பிடுகிறார்.

> "தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன்

> **பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கம் உள்ளவர்களாகக் கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?"**

ஒரு மனிதன் தன் சொந்த வீட்டை ஆளுகை செய்யவேண்டும். அவன் அதிகாரத்தை வெளிப்படுத்தி பிள்ளைகளை மரியாதையுள்ளவர்களாய் வளர்த்து, கீழ்படிதலுடையவர்களாய் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். தன் வீடடில் ஒருவனால் இதைச் செய்யக்கூடாதிருந்தால் தேவனுடைய சபையில் அவன் மூப்பனாயிருந்து வெற்றிபெறமுடியாது என்பதைப் பவுல் குறிப்பிடுகிறார்.

கிரேக்க பாஷையில் "ஆளுவதென்பது" "முன்னால் நிற்பது" அல்லது "தலைவனாயிருப்பது" என்று பொருள்படும். இது பல்வேறு தொடர்புடைய யோசனைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் புரிந்துகொள்ளக் கூடிய சில வழிகளை நான் உங்களுக்கு வழங்க விரும்புகிறோம். ஆட்சி செய்ய, வழிநடத்த, தலைமையில் நிற்க, பாதுகாக்க, கட்டுப்படுத்த ஒரு தகப்பன் தன் வீட்டின் தலைவராக இருந்து, தன் குடும்பத்தின் முன்னால் நின்று நல்ல உதாரணமாகத் தன்னைக் காண்பித்து, தன் குடும்பத்திற்கும் வாழ்க்கையின் அபாயங்களுக்கு இடையே நிற்கிறவராகக் காணப்படவேண்டும். அதன்

பொருள் அவன் ஒரு மனிதனாக இருக்க வேண்டும். மனிதனாக ஒரு தகப்பனாக இருப்பதற்கான தைரியம் அவனிடம் இருக்க வேண்டும்.

மேலும், பவுல் சபையின் தலைமைத்துவத்திற்கு முதலாவதாகக் குடும்பத்தில் தலைமைத்துவம் அவசியம் என்று கூறுகின்றார். இதற்கான உறுதியான காரணம் என்னவெனில் வீடு சபையின் ஒரு சிறு கருவாக இருப்பதுதான்.

சபையில் 3 முக்கிய அம்சங்கள் உள்ளன. முதலாவது பாஸ்டர் அல்லது மேய்ப்பன்; இரண்டாவது டீக்கன் அல்லது சபை உதவிக்காரர் ; மூன்றாவது சபை அல்லது மந்தை. இவைகள் மூன்றும் வீட்டிலுள்ள 3 முக்கிய அம்சங்களோடு ஒத்ததாயிருக்கிறது. வீட்டில், தகப்பன் போதகர் அல்லது மேய்ப்பனின் உத்திரவாதம் உடையவராக இருக்கிறார். வேத வாக்கியங்களின்படி மனைவி ஒரு சபை உதவிக்காரரைப் போன்று உதவிக்காரராய், டீக்கனாய் புருஷனுக்கு உதவி செய்யும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். பிள்ளைகள் சபை மக்களாக அல்லது மந்தையின் ஆடுகளாக இருக்கிறார்கள். தேவன் குடும்பத்திற்குள் ஒரு சரியான புதிய ஏற்பாட்டுச் சபையின் அடிப்படைக் காரியங்களை வைத்திருக்கிறார். ஆகவே தேவன் ஒரு குடும்பத்தின் தகப்பனிடம், “நான் உனக்கு ஒப்புவித்திருக்கிற சிறிய சபையில் நீ வெற்றியடைந்துவிடு, அப்பொழுது தேவனுடைய சபையின் பதவி உயர்விற்கு நீ தகுதியாவாய்” என்று கூறுகின்றார்.

“நீங்கள் சபையில் கலந்துக் கொள்ளும் ஜனங்களின் ஒரு பெரிய கூட்டத்தை நீங்கள் உருவாக்கலாம். ஆனால் கடைசியில் அந்த சபையை நிரப்புகிற குடும்பங்களைப் பார்க்கிலும் சபை பெலமுள்ளதல்ல. குடும்பங்கள் ஒழுங்கில் இல்லாவிட்டால், சபையும் ஒழுங்கில் இருக்க முடியாது.

சபையின் தலைமைத்துவத்திற்கு முதலாவதாகக் குடும்பத்தில் தலைமைத்துவம் அவசியம்.

ஒரு தகப்பனாக ஆளுகை செய்யும் உத்திரவாதத்தை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிய ஆபிரகாமிடம் நான் திரும்புகிறேன். ஆதியாகமம் 18ல் கர்த்தர் ஆபிரகாமைக் குறித்துப் பேசின குறிப்பிட்ட பகுதி இருக்கிறது. ஆபிரகாமை ஒரு புதிய தேசத்தின், ஜாதியின் தலையாக ஏன் தேவன் தெரிந்தெடுத்தார் எனில் முடிவிலே எல்லா மனுக்குலத்திற்கும் மீட்பைக் கொண்டுவரவே என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

சபையை நிரப்புகிற குடும்பங்களைப் பார்க்கிலும் சபை பெலமுள்ளதல்ல.

தேவன் ஏன் ஆபிரகாமைத் தெரிந்தெடுத்தார் என்று நீங்கள் ஆச்சரியப்பட்டீர்களா என்று எனக்குத் தெரியாது. சந்தேகத்திற்கு இடமின்றி, பூமி முழுவதும் ஆபிரகாமின் சமகாலத்தவர்கள் பல ஆயிரக்கணக்கானவர்கள் இருந்தனர். ஆபிரகாமின்

நாட்களில் கோடிக்கணக்கானவர்கள் இருந்தபோதிலும் தேவன் ஒரு மனிதனைத் தெரிந்தெடுத்ததற்கான காரணத்தை தேவனே கூறுவது என்னவெனில், மற்ற ஜாதிகளின் இரட்சிப்பு ஆபிரகாமைச் சார்ந்திருக்கிறது என்பதுதான்.

> **ஆதியாகமம் 18:17–19:**
> **“அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.”**

முதலாவது ஆபிரகாமின் பெயருடைய அர்த்தத்தைப் பார்ப்போம். அவனுடைய முதல் பெயராகிய ஆபிராம் என்பதற்கு “உயர்த்தப்பட்ட தகப்பன்” என்று அர்த்தம். பிறகு, தேவன் அவனோடு உடன்படிக்கை செய்து அநேக ஜாதிகளுக்கு அவன் தகப்பனாவான் என்று வாக்குப்பண்ணி, “திரள்கூட்டத்தின் தகப்பன்” என்னும்

அர்த்தத்தில் ஆபிரகாம் என்று அவன் பெயரை மாற்றினார். இரண்டு பதங்களிலும் அவன் பெயரின் முதல் யதார்த்தம் அவன் ஒரு தகப்பன் என்பதே யாகும். இது மிகவும் குறிப்பிடத்தக்கது. தேவன் ஆபிரகாமைத் தகப்பனாகத் தெரிந்தெடுத்தார்.

இரண்டாவதாக, ஒரு தகப்பனின் ஸ்தானத்தில் கடமைகள் நிறைவேற்றப்படும்போது, அது ஒரு பெரிய ஜாதியைக் கட்டி எழுப்புகிறது. “அவன் ஒரு பெரிய பலத்த ஜாதியாவான்”என்று தேவன் ஆபிரகாமைப்பற்றிக் கூறினார். ஏன்? ஏனெனில் ஒரு தகப்பனுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் அவன் நம்பிக்கைக்கு உரியவனாக இருந்தான்.

மூன்றாவதாக, ஏன் தேவன் ஆபிரகாமைத் தெரிந்தெடுத்தார்? அதை அவரே கூறுகிறார், “அவன் தன் பிள்ளைகளுக்கும் தன் வீட்டாருக்கும் . . . கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்.” தேவன் அவனில் கண்டது என்ன? தன் பிள்ளைகளுக்கும், வீட்டாருக்கும் காத்தருடைய வழிகளைக் காத்து நடக்கும்படிக் கட்டளையிடுவான் என்பதை தேவன் கண்டார். தன் குடும்பத்தின் ஆளுனராக தன் கடமைகளை நிறைவேற்றுவதில் அவன் நம்பிக்கைக்குரியவன்.

“கட்டளை” என்கிற வார்த்தை சற்று கடினமான வார்த்தை. அது ராணுவ வார்த்தை. சில தாய்மார்கள் என்னிடம், “ஒரு சர்வாதிகாரியைப்பற்றி பேசுகிறீர்களா?”என்று கேட்கலாம். இல்லை. ஒரு மனிதனாக இருந்து,

தந்தைத்துவம், அதன் கடமைகளை நிறைவேற்றும் போது, வலிமைமிக்க தேசத்தை உருவாக்குகிறது.

தன் ஸ்தானத்தையும் உத்திரவாதத்தையும் உணர்ந்த மனிதனைப் பற்றிப் பேசுகிறேன். தேவனுக்குக் கீழாக இருக்கிற ஒரு மனிதன் தன் குடும்பத்தை கட்டளையிடக்கூடிய சில சூழ்நிலைகள் உண்டு. “தேவனைப் பிரியப்படுத்தி அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற, இவ்விதமாய்த்தான் நம் வீட்டில் நாம் செய்யப்போகிறோம். இதையல்ல அதையே செய்யப்போகிறோம்” என்று கூற அவன் உத்திரவாதியாயிருக்கிறான். வீட்டாரின் அடிப்படை சட்டதிட்டங்களைத் தீர்மானிக்கிற உரிமை அவனுக்கு உண்டு; எப்பொழுது அவர்கள் சேர்ந்து உணவருந்தவேண்டும், இளம் பிள்ளைகள் எப்பொழுது வீட்டிற்குள் வந்திருக்கவேண்டும், அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிற பொழுதுபோக்குகள், தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக அவர்கள் செலவிடும் நேரம், எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அவர்கள் பார்க்கலாம் முதலானவைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் தகப்பனுக்கு உண்டு. இந்த விஷயங்களில் தன் குடும்பத்தைக் கட்டளையிடும் கடமையும் அவனுக்கு உண்டு. தேவன் சொன்னார், “நான் வாக்குத்தத்தம் பண்ணினதை ஆபிரகாமின் மீது கொண்டு வருவேன்,

ஆபிரகாம் அனைத்து அடுத்தடுத்த விசுவாசிகளுக்கும் ஒரு மாதிரியாக முன்வைக்கப் படுகிறார்.

ஏனென்றால் அவன் எனக்காக அதைச் செய்வான் என்று நான் நம்புகிறேன்.“

நான்காவதாக, மற்ற எல்லா வேதவாக்கியங்களிலும் ஆபிரகாம் மற்ற எல்லா விசுவாசிகளுக்கும்மாதிரியாக வைக்கப்பட்டிருக்கிறான். உண்மையில், நாம் விசுவாசத்தினால் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருக்கிறோம் என்றும், நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமின் விசுவாச அடிச்சுவடுகளில் நாம் நடக்கவேண்டியவர்கள் என்றும் புதிய ஏற்பாடு கூறுகிறது. ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளில் நடப்பதென்றால், ஆபிரகாம் தன் வீட்டில் நடந்துகொண்டதுபோல நாமும் நம் வீட்டில் நடக்க வேண்டும் என்று பொருள்.

இதன் முடிவில், ஆபிரகாமுக்கு மாறுபட்ட ஒரு மனிதனை நான் காண்பிக்க விரும்புகிறேன். ஆபிரகாமோடு நீண்ட தூரம் பிரயாணஞ்செய்து ஆபிரகாம் கண்டவைகளைக் கண்டும், ஆபிரகாம் அறிந்தவைகளை அறிந்தும் இருந்த வேறொரு மனிதன் இருந்தான். அவன்தான் லோத்து. ஆனால் ஆபிரகாமும் லோத்தும் பிரியவேண்டிய நேரம் வந்தது. ஆபிரகாம் லோத்தைப் பார்த்து, “நீ வலதுபுறம் போனால் நான்

இடதுபுறம் போகிறேன்” என்று கூறியபோது லோத்து பாவம்நிறைந்த சோதோமைத் தெரிந்துகொண்டான். சோதோமிற்குள் லோத்து இருந்தான், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அங்கு வருவதாயிருந்தது. லோத்து தன் மருமகன்களையும் குடும்பத்தினரையும் வெளியே கொண்டுவர முயற்சி செய்து தோற்றுப்போனான். அவன் தப்பித்து பின் திரும்பிப்பார்த்தபோது சோதோமின் புகைமூட்டத்தில் அவனுடைய குடும்பத்தில் பலரும் அழிந்துபோய்விட்டனர் என்றும், அவர்களை உள்ளே கொண்டு சென்றது அவன்தான் என்றும் அவன் உணர்ந்திருக்க வேண்டும்.

பிதாக்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை சோதோமுக்குள் வழிநடத்தலாம், ஆனால் அவர்களை நீங்கள் சோதோமைவிட்டு வெளியே கொண்டுவர முடியாமல் போகலாம். ஒரு தகப்பனாக லோத்துவின் தோளில் எவ்வளவு பயங்கரமான உத்திரவாதம் இருந்தது. அவன் தன் பிள்ளைகளை பாவ ஸ்தலத்திற்குள்ளும், முடிவான நியாயத்தீப்புக்குள்ளும் கொண்டுசென்றான், ஆனால் அவர்களை வெளியே கொண்டுவர முடியவில்லை.

ஒரு தகப்பன் தவறும்போது 6

ஒரு தகப்பன் தவறிவிடுகிறார் என்று வைத்துக்கொண்டால், அவர் குடும்பத்திற்கு என்ன சம்பவிக்கும்? ஒரு தேசத்தின் தகப்பன்மார்கள் தவறினால் அந்த தேசத்திற்கு என்ன சம்பவிக்கும்? ஆபிரகாம் ஒரு தகப்பனாகத் தன் கடமைகளை நிறைவேற்றுவான் என்று கண்டபடியினால், அவன் ஒரு பெரிய, பலத்த ஜாதியாவான் என்று வாக்குப்பண்ணினார். பிதாக்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றாத தேசத்தின் நிலை என்ன?

உபாகமம் 28ல் மோசே 2 காரியங்களை பட்டியலிடுகிறார்: முதலாவதாக, தேவனுடைய ஜனங்கள் அவருக்குக் கீழ்படிந்தால் வரும் ஆசீர்வாதங்கள்; இரண்டாவதாக, அவர்கள் கீழ்படியாவிட்டால் அவர்கள்மேல் வரும் சாபங்கள். முதல் 14 வசனங்கள் ஆசீர்வாதங்களை உடையதாக இருக்கிறது. மற்ற 15 முதல் 68 வரையுள்ள வசனங்கள் கீழ்படியாமையினால் வரும் சாபங்களைப் பட்டியலிடுகிறது.

இங்கு சில குறிப்பிடத்தக்க சாபங்கள் கூறப்பட்டுள்ளது. அவைகளில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உபாகமம் 28:41இல் மேசே கூறுகிறார்:

> "நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடேகூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள்."

இங்கே மோசே பிதாக்களைப்பற்றி "பெறுவாய்" என்று கூறுகிறார். பிள்ளைகள் நம்மோடு இல்லாதிருப்பதே ஒரு சாபம் என்று ஒருநாள் அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். "எத்தனை பெற்றோர் தங்கள் பிள்ளைகளோடிருந்து சந்தோஷப்படுகிறார்கள்?'' ஒருநாள் என்னுடைய நண்பரான போதகர், "கர்த்தாவே, பிள்ளைகள் எங்களுக்கு ஆசீர்வாதமேயொழிய பாரமல்ல என்று நினைவுகூற உதவிசெய்யும்" என்று ஜெபிப்பதைக் கேட்டேன். அநேகர் கீழ்படியாமையின் சாபத்தினால்தான் தங்கள் பிள்ளைகளோடு சந்தோஷப்பட முடியவில்லை. மனிதர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதமாக தேவன் பிள்ளைகளைத் தந்திருக்கிறார். பெற்றோர், குறிப்பாகத் தகப்பன்மார் கர்த்தருடைய வழியில் நடக்காவிட்டால் ஆசீர்வாதங்களை தொடரமுடியாது. மோசே இஸ்ரவேலின் பிதாக்களை இவ்விதமாக எச்சரிக்கிறார், அவர்கள் தேவனுடைய வழியைக் கடைபிடித்து, அதில் நடக்காவிட்டால், பிறகு, "உங்கள் பிள்ளைகள் உன்னோடே கூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப் போவார்கள்"

மனிதர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதமாக தேவன் பிள்ளைகளைத் தந்திருக்கிறார்.

கடந்த 40 வருடங்களில் பல லட்சம் பிள்ளைகள் சாத்தானின் அடிமைத்தனமாகிய போதை மருந்துகள்,

சிறார் குற்றவாளிகளை உருவாக்க முதிர்ந்த குற்றவாளிகள் தேவை.

வேசித்தனம், பில்லிசூனியம் மற்றும் பல தீமைகளில் பிள்ளைகள் செல்லுவதைப் பார்த்திருக்கிறோம். வேற்றுகிரகவாசிகள் படையெடுத்து வந்து அவர்களை சிறைபிடித்துக் செல்லுவதுபோல இது சம்பவிக்கிறது. இது ஏன் சம்பவிக்கிறது? ஏனென்றால்; அவர்கள் பிதாக்கள் தங்கள் கடமைகளில் தவறியிருக்கிறார்கள். நவீன சமுதாயத்தில் காரியங்களை நடப்பிக்கிற பிரதான உத்திரவாதம் பிதாக்களிடம் இருக்கிறது. சிறார் குற்றவாளிகளைப் பற்றி நிறைய கேள்விப்படுகிறோம். முதல் முதிர்ந்த குற்றவாளிகள் இருக்கும்வரை சிறார் குற்றவாளிகள் இல்லை. சிறார் குற்றவாளிகளை உருவாக்க முதிர்ந்த குற்றவாளிகள் தேவை.

ஏற்கனவே நான் காண்பித்திருப்பதுபோல ஒரு தகப்பனுடைய உத்திரவாதங்களில் ஒன்றாக ஆசாரிய ஊழியம் இருக்கிறது. மல்கியா 2:7 கூறுகிறது:

> **“ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்.’**

கர்த்தருடைய பிரமாணத்தை அறிந்து அதைக் கர்த்தருடைய ஜனங்களுக்கு வியாக்கியானஞ்

செய்வதுதான் ஆசாரியனுடைய உத்திரவாதமாக இருக்கிறது. ஆகவே ஒரு ஆசாரியன் "செய்தி கொண்டுவருகிறவனாக", கர்த்தருடைய ஜனங்களுக்கு அவருடைய "பிரதிநிதியாக" இருக்கிறான். ஒரு தகப்பன் ஆசாரியனாக செயல்படும்போது அவன் உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். அவனுடைய பிள்ளைகளும், வீட்டாரும் கர்த்தரை அவன் வாயில் தேட வேண்டும். அவன் அவர்களுக்குத் தேவனுடைய பிரதிநிதியாக இருக்க வேண்டும்.

ஆசாரியன் இப்பணியில் தவறினால் என்ன சம்பவிக்கிறது? ஆசாரியன் தவறும்போது, தேவன் ஒரு குடும்பத்திற்கு, ஒரு தேசத்திற்கு என்ன செய்வார் என்று ஓசியா 4:6 கூறுகிறது:

> "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் (அறிவியல் சார்ந்த அறிவு அல்ல, ஆனால் கர்த்தருடைய வழியையும், வார்த்தையையும் குறித்ததான அறிவு) சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்."

இது தகப்பன்மாருக்கான வல்லமையுள்ள வார்த்தை, “நீ உன் குடும்பத்திற்கு ஆசாரியனாயிருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன், உன் குடும்பத்திற்கு அவசியமான அறிவை நீ தள்ளிவிட்டபடியினால், நானும் உன்னைத் தள்ளிவிடப்போகிறேன். நான் இனிமேல் உன்னை ஆசாரியனாக ஏற்றுக்கொள்ளப் போகிறதில்லை. உன் பிள்ளைகளுக்காக நீ செய்கிற ஆசாரிய ஊழித்தை நான் ஏற்றுக்கொள்ளாதபடியினால், உன் பிள்ளைகளை நானும் மறந்துவிடுவேன்” என்று தேவன் சொல்கிறார்.

இது பயமுறுத்துவதாக உள்ளது! தேவன் நம்மைப் பார்த்து, “நீ என் உத்திரவாதத்தில் தவறினபடியினால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிட்டு அவர்கள் இல்லாததுபோல நான் அவர்களை மறந்துவிடுனே;” என்று கூறினால், நம்முடைய தேசம் தேவன் மறந்துவிட்ட பிள்ளைகளால் நிறைந்திருக்கும். ஏனெனில் அவனவன் தகப்பன்மார் கார்த்தருடைய வேதத்தைக் காத்து நடக்கவில்லை. அதை நான் இவ்விதமாக சொல்கிறேன்: தேவனுடைய சட்டத்தின் அறிவை நிராகரிக்கும்போது, தந்தை தனது குடும்பத்திற்கு ஒரு ஆசாரியனாக இருக்கும் உரிமையை இழந்துபோகிறார். தகப்பனின் ஆசாரிய ஊழியம் இல்லாதபோது தேவன் சொல்கிறார், “நான் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.“ அது ஒரு மிகப்பெரிய உன்னதமான சிந்தனை.

முடிவிலே பழைய ஏற்பாட்டின் கடைசி 2 வசனங்களுக்கு நேராக வர விரும்புகிறேன். பழைய ஏற்பாட்டின் கடைசி வசனம் “சாபம்” என்றிருக்கிறது நீங்கள் கவனித்திருக்கிறீர்களா என்று எனக்குத் தெரியாது. பழைய ஏற்பாட்டிற்கு பிறகு, தேவன் மனிதனுக்கு வேறெதும் சொல்வதற்கில்லை என்றால் மனுகுலுத்திற்கு அவருடைய கடைசி வார்த்தை சாபமாக இருந்திருக்கும். புதிய ஏற்பாட்டிற்காக தேவனுக்கு நன்றி, அது சாபத்திலிருந்து வெறியேறும் வழியைக் காட்டுகிறது. மல்கியா புத்தகத்தில், தேவன் கூறுகிற கடைசி இரண்டு வசனங்கள் இதுதான், மல்கியா 4:5-6 :

> **“இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.”**

தீர்க்கதரிசன வெளிப்படுத்தலின் வெளிச்சத்தினால் நான் மிகவும் தொடப்பட்டிருக்கிறேன். அதில் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே மல்கியா தீர்க்கதரிசி நம்முடைய நாட்களில் மிகப்பெரிய, மிக அவசரமான

சமூகப்பிரச்சனையைக் காணக்கூடியவனாக இருந்தான். அது என்ன பிரச்சனை? பிரிந்துபோன நொறுங்கிப்போன குடும்பங்கள். தகப்பனும், பிள்ளைகளும் உறவையிழந்து நிற்கிறார்கள். பிள்ளைகள் முரட்டாட்டமானவர்கள், பிதாக்களோ கவலையற்றவர்கள், அவட்சியமானவர்கள். இந்நிலை மாறாவிட்டால், அது சாபத்தைக் கொண்டுவருமென தீர்க்கதரிசி எச்சரிக்கிறான். தேவனுடைய வார்த்தை 2 காரியங்களை நமக்கு முன் கொண்டுவருகிறது. ஒன்று நம் குடும்ப உறவைச் சீர்படுத்தி வாழவேண்டும், இல்லாவிட்டால் குடும்ப உறவு நாசமடைய அனுமதித்து தேவசாபத்தில் நாமும் அழிந்துபோவதுதான்.

> **தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போவது பிதாக்களின் தீர்மானம்தான்.**

குறிப்பிட்டுச் சொன்னால் முடிவு பிதாக்களால் நிர்ணயிக்கப்படும். தகப்பன்மார்களை தான் தேவன் பொறுப்பாக்குகிறார். தான் விரும்பின தகப்பனாக ஆபிரகாமை தேவன் நம்பமுடிந்தது. “அவன் பெரியதும், பலத்ததுமான ஜாதியாவான்” என்று கூறினார். அதற்கு எதிர்மறையாயிருப்பதும் உண்மையாயிருக்கிறது. பிதாக்கள் ஒரு தேசத்தில் தவறிப்போய் தங்கள் உத்திரவாதத்தை நிறைவேற்றாவிட்டால் ஒரு தேசம் பெரியதாயிருக்க முடியாது. நம்முடைய தேசம் சந்திக்கும் பெரிய

58: தந்தைத்துவம்

பிரச்சனை இதுதான் என்று நான் நம்புகிறேன். பிதாக்கள் தேவனிடம் திரும்பி தங்கள் உத்திரவாதங்களை தேவனுடைய பார்வையில் சந்திக்கப் போகிறார்களா? இல்லாவிட்டால், இப்பொழுது குடும்பங்களில் உள்ள சமூக ஒழுக்கச் சீர்கேடுகள் தொடர்ந்து முடிவான விளைவாகிய சாபத்தைச் சந்திக்கப்போகிறார்களா?

தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப்போவது பிதாக்களின் தீர்மானம்தான். பிதாக்கள் பிள்ளைகளிடம் திரும்ப தேவன் விரும்புகிறார். அப்பொழுது பிள்ளைகள் பிதாக்களிடம் திரும்புவார்கள் என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார்.

எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும் கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச்

சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார், அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது, ‘இயேசு திரும்பும் வரை’ தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு,

இங்கு செல்க:www.derekprince.com

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DERFK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.